Wielding bows and arrows.

If born as mere earth
Beside Maariamman temple
Would savour festival each month.

Alas, I'm born a mere female
And keep sobbing days on end.

புதுக்கவிதை

NEW POETRY

இரா. ஆனந்தி

சில நேரங்களில்
பேசுவதைவிட
பேசாமல் இருப்பது சிறந்தது!

பல நேரங்களில்
நினைப்பதைவிட
மறக்காமல் இருப்பது
சிறந்தது!

இதை
நான் உன்னிடம்
சொல்வதைவிட
சொல்லாமல் இருப்பது...

Ira Anandi

Sometimes
Silence better
Than words.

Often
Not forgetting better
Than pondering.

And
Better still
To keep quiet
Than this sharing...

ஆண்டாள் பிரியதர்ஷினி

கை விரி

தாகமாயிருக்கிறது

ஒரு காலத்தில்
நான் அமுதசுரபி
பொங்குமாங்கடல்

இன்றைக்குப்
பாளமாய் பிளந்த
தோலாய்த் தளர்ந்த
தாயின் மார்பு

வெள்ளமாய்
மழைப் பிரவாகமாய்
சூழலாய்
கரை உடைத்து
நுரை சுழித்து
நிற்காமல்
ஒரு காலத்தில்
ஓட்டம்

இன்றைக்கு
ஓடாத மணல் ஆறு

பயிருக்கு
உயிர்கொடுத்து
உயிருக்குப்
பயிர் கொடுத்து
யுகம் யுகமாய்த்
தாகம் தீர்த்தேன்

Andal Priyadarshini

Outstretched Hands

I am thirsty

Once -
A surging ocean
Of perennial nectar.

Today -
Mother's desiccated breast
Furrowed deep and parched.

Once -
Raging I was
As flood
As spate of rain
As vortex
Breaking banks
Foams churning
Unstoppable inexorable.

Today -
Stilled river of sand.

Lending
    Life to plants
    Plants to lives
Slaked thirst
Over many an epoch.
Today -

இன்று
காகம் குடிப்பதற்கு
நீரின்றிக்
கைவிரித்தேன்

ஆடிப் பெருக்கினிலே
தண்ணீரே தீபமாச்சு
இன்று
மணலே தண்ணீராச்சு

அரசுகள் மாறுகின்றன
கூட்டங்கள் கூடுகின்றன
சட்டங்கள் போடுகின்றன
ஆறுகள் வாடுகின்றன

தாகமாயிருக்கிறது
தண்ணீர் தாருங்களேன்.

Dry waterless
In helpless despair
Unable to quench
Even a crow's thirst

In the tide of Aadi month
Water a spray of lamps
Today -
Sandy waste as water.

Rulers change
Meetings aplenty
Laws sans number
But
Rivers merely languish.

I am thirsty
Pray give some water.

அழகுநிலா

இலை

ஆற்றில் விழுந்த இலை
மரத்தைவிட்டு வெகுதூரம் வந்தாயிற்று
அடுத்து அருவி என்பது
இலைக்குத் தெரியாது
அது இலை என்பது
ஆற்றுக்கும் தெரியாது.
இலைமீது தும்பியொன்று பயணிக்கிறது
அது பயணமன்று.
வெறுமனே ஓர் அமர்வு.
ஆறு தும்பி அருவி இலை
யாருக்கும் தெரியாது யார்
யாரென்பது.
அண்டத்தின் தீராத பேரிருட்டில்
ஒய்ந்து மிதக்கிறது இலை.
விருட்டெனப் பறக்கிறது
தும்பி
விண்மீன்கள் ஒளிரும் மகா இரவில்
மரம் உதிர்க்கிறது
மற்றுமோர் இலையை.
அது இந்த முறை
காற்றில் அலைகிறது.

Azhagunila

The Leaf

The leaf drops in the river
Travels far from the tree.
Next the waterfall
But the leaf knows not.
That it is a leaf
Not known to the river.
A dragonfly on the leaf.
It is no travel
A mere perch.
River dragonfly waterfall leaf
None knows
Who is who.
In the dark depths of the universe
Floats the leaf in languid ease.
Suddenly darts
The dragonfly.
In the great night
Dotted with glistening stars
The tree drops
One more leaf
This time
It wanders in the air.

சே. பிருந்தா

சில பகிர்தல்கள்

நட்சத்ரங்கள் விழித்த இரவை
நான் தூங்கிக் கழித்து விட்டேன்
எனக்கென அவை
பனித்துளிகளில் விட்டுச் சென்றிருந்த
செய்திகளை படிக்கத் தவறினேன்
குளிர்ந்த விடியலில்

பூக்களில் படிந்திருக்கும்
மிச்ச செய்திகளை
வாசிக்கப் போகையில் அது
வாசனையாய் மொழி பெயர்ந்திருந்தது
புரிந்து புரியாமல்
நுகரப்பட்டு விட்ட செய்திகளை
நஷத்ரங்களோடு பகிர

வேண்டியிருப்ப தெல்லாம்
ஒரே ஒரு தூங்காத இரவும்
வானம் தெரிகிற ஜன்னலும்

Che. Brinda

Some Sharing

Night alight with stars
I missed in slumber.
Messages left for me
In glistening dewdrops
I failed to read
In the cold morn.

The residual messages
Lingering in the flowers
I sought to read
Only to find them
Translated into aroma.
The garbled messages
I inhaled
Share I want with stars.

All I need
A night sans sleep
A window framing the sky.

தேவமகள்

கடைப் பெண் கடைப்பெண்

புதுக்கடை திறக்குமுன்
மாமா விளம்பரித்தார்

சுறுசுறுப்பான அழகான
விற்பனைப் பெண்கள் தேவை

மாமி ஆட்சேபித்தாள்
மாமா சொன்னார்

பையன் திருடுவான்
தம்மடிக்கப் போவான்
தனிக்கடை போடுவான்
சட்டம் பேசுவான்

பொட்டப்புள்ளக
சிவனேன்னு
கொடுத்த காசுக்கு உழைக்கும்
வர்றவனுக்கும் கண்ணுக்கும் குளிர்ச்சியா
கூட்டம் குறையாது

மாமா சொல்லாதது
அப்பப்ப நானும்
தொட்டுப் பாத்துக்கலாம்.

Devamagal

Salesgirl

Before opening the new store
Mama declared.

Should employ salesgirls
Diligent and pretty.

Mami protested
And Mama explained.

Boys would steal
Would keep going out to smoke
Would set up parallel store
Would quote law.

The girls
Would be passive
Would toil for the money they get
Would be eye-filling for the customers
And no dearth of crowd.

Left unsaid....
Off and on
I can also be stroking.

இளம்பிறை

புது மார்கழி

மாநகர் வந்து
மாதங்கள் பல ஓடிவிட்டன
பொருட்களை
ஏற்றி வந்துவிட்டேன் அப்போதே.
வராமல் அடம்பிடித்துக் கொண்டிருக்கும்
இந்த மனசைத்தான்
எப்படிக் கொண்டு வருவதென
தெரியவில்லை.
வாசல்களில் போடப்படும்
கோலங்களைப் பார்த்துப் பார்த்துதான்
மார்கழியை உணர முடிகிறதிங்கு.
அருகம் புல்லில் துளிர்த்திருக்கும்
பனித் துளிகளை
மிதித்து... உடைத்து
முழங்காலுக்குக் கீழ் நனைந்த துணியின்
குளிர்ந்த ஒட்டலோடு
பூப்பறிக்கவோ... புல்லறுக்கவோ
முள்கீறி
இலந்தைப் பழம் பொறுக்கவோ
படிக்கவோ... எழுதவோ செல்லாத
என் முதல்
மா்நகர் மார்கழி இது.

Ilampirai

New Margazhi

Months have rolled by
Since I moved to the city

Had brought
All my things
But mind lingers in my village
How to coax its way here
I know not

Here
I feel Margazhi's presence
Only from Kolams
Drawn in frontyards

Stamping... breaking
Dew drops
Cool hug of wet garment
Clinging below the knees
Gathering flowers... cutting grass
Picking Ilandai berries
Braving thorn picks
Reading... Writing...

Sans all these charms
The first
City Margazhi!

ப. கல்பனா

இனி வெறும் வானம் போதும்

பால்ய காலங்களில்
பறவைகளும் யானைகளும் தெரியும்
பிடித்தமான விலங்குகள் ஊர்வலம் போகும்
பஞ்சுமிட்டாய்போல்
புசுபுசுவென்று அசையும் எங்கும்
சாம்பல் கறுப்பு வெண்ணிறப் போர்வையில்
நிலா ஒளிந்து மீளும்
விளையாட்டுப் பொருளாய்த் தோன்றும்...

இப்பொழுது தலையை உயர்த்தினாலோ
மனதை அரிக்கும் பயங்களும் விரக்திகளுமே
விசித்திரமான வடிவங்களில்

முக உறுப்புகள் இடம் மாறி
நெற்றியில் ரத்தம் தோய்ந்த நகங்களுடன்
நெளியும் உருவங்கள்

சிக்கலான பிணைப்பில்
மண்டையோட்டுச் சக்கரங்கள் கொண்ட
கவச வண்டிகள்

கூரிய பற்களுடன் ஓலமிட்டுச் சிரிக்கும்
அரக்க மிருகங்கள்..

பழைய மேகம் என்னவாயிற்று ?

B. Kalpana

Blank sky will do

During childhood days

Birds and elephants paraded
Adorable animals in procession
Like candy floss
Flitted about in fluffy mass

Beneath a blanket
Of ash dark and white hues
Moon played hide-and-seek
Like a lovely toy...

But now
When I lift my head
Grating fears and frustrations
In weird shapes

Facial parts in disarray
Foreheads gored by blood-soaked nails
Slithering apparitions

Trundling armoured vehicles
With wheels of skulls
Gruesomely interlocked

Grisly beasts
Guffawing creepily
With sharp protruding canines...

What at all happened
To the charming old clouds?

கனிமொழி

கசகசத்த நகரம்

முதுகில் கசகசத்தது
நகரம்
ஒவ்வொரு முறை துடைத்த போதும்
கைக்குட்டையில் சுவடு பதித்தது
என் முகம்.
சிலுவைகளுக்கும் குறைவில்லை.
பேருந்தின் ஜன்னல் வழியே
பாட்டி புளிச்சென்று துப்பிய
புகையிலை எச்சில்
சில அங்குலம் குறிதவறி
தார் ரோட்டில் விழுந்து வீணாகியது.

மசூதி, தேவாலயங்களில்
தினமும் வழிபட சத்தமாய்
அழைத்தார்கள்.
போட்டிக்கு மாரியம்மனுக்கு
மைக் வைத்து பூசை நடத்தினார்கள்.
நடிகர்கள், அரசியல்வாதிகள்,
சமயச் சான்றோர்கள்
பூதாகரமான கட்டவுட்களாய்
வழியெங்கும் பயமுறுத்துகிறார்கள்.

அவசர மனிதர்கள்,
கடுகடுத்த முகங்கள்.
பேரிரைச்சலாய் எழுந்து
பேரிரைச்சலில் அடங்கும் நகரம்.

மரியாதை நிமித்தங்களுக்கு
நேரமற்ற மொழி.
இருபது வருடம் கழித்து

Kanimozhi

The sticky city

It felt sticky at the back
This city.
Each time I wiped
Left a trace in the hanky
My face.
No dearth of crosses.
A paati issued a projectile
Of tobacco spit
Through the bus window
It missed the target
By just a few inches
Landing in vain on the asphalt road.

From mosques and churches
Emerge loud calls
For daily prayers.
Not to be outdone
Poojas for Maariamman
With mikes blaring.
Actors, politicians,
Religious leaders
Frighten all the way
As monstrous cut-outs.

Men in a tearing hurry,
Grouchy faces.
Rising as a rumpus
Settling as a racket
This city.

Language with no time
For courtesies basic.

பார்ட்டியில் பார்த்து,
என் பக்கத்து வீடா நீங்கள்
என வினவும் வாழ்க்கை.
இதில் வேரறுத்து ஓடிவிடும்
கனவோடு நாட்களை நகர்த்தும்
மனிதர்கள்.

இந்த அழுக்கிலும் சந்தடியிலும்
கரைந்து போகிறது கடந்த காலங்கள்
மாமாவின் மதமாற்றம்
தாயின் ஜாதி, தாத்தாவின்
சிறைவாசம், தந்தை அறியாப் பிள்ளை,
செல்போனில் முகம் தொலைத்த
மனிதர்களின் ஜோதியில்
சரித்திரங்கள் கரைந்தன.
சென்ற வாரம் வீட்டிற்கு வந்தவனும்
இன்று இவளோடு சினிமாவில்
பார்த்தவனும் ஒன்றா
சிந்திக்க நேரமில்லை.

சரவணபவனுக்கும் பீட்ஸா கார்னருக்கும்
இடையே பிசிறில்லாமல்
ஊடாடும் வாழ்வில்
இதமாய் ஏந்தும்
இந்த சந்தடி மிகுந்த
கான்கிரீட் நகரத்துள்
தொலைந்து போகிறேன்,
கூடு வந்து சேர்ந்த ஒரு
சிறு பறவையின்
அமைதியுடன்.

Twenty years roll by
Meet him at a party,
'Oh! You're my neighbour, are'nt you?'
Life marked by such questions.
Folks
Pushing each day
Dreaming each day
To break away free.
In this grime and din
Dissolve the days past:
Mama's conversion,
Amma's caste,
Thatha's prison life,
Child with father unknown...
Histories melting away
In the halo of men
With faces lost in cellphones.

The guy who came home last week
And the one I saw today
With that woman in the cinema house -
One and the same?
No time to think.

In the life
That shuttles seamlessly
Between Saravana Bhavan
And Pizza Corner,
I get lost
In the din of the concrete jungle
Cradling me in comfort,
With the repose of a little bird
Returning to its nest.

க்ருஷாங்கினி

முளைக்காத புதையல்

பல் விளக்குடா சீக்கிரம்

அப்பா நீர் எங்கிருந்து கிடைக்கிறது ?
பூமியில் இருந்துதான்

கீழே ஊற்றும் நீர் ?
திரும்ப பூமிக்கே

சோறு எங்கிருந்து சொல் ?
அதுவும் பூமியிலிருந்துதான்

சட்டை, நிக்கர் எல்லாம் ?
பருத்திச் செடியிலிருந்து

இந்தச் செடி எப்படி முளைத்தது ?
புதைத்த விதையிலிருந்து

விதை எப்படிப் புதைந்தது ?
முளைத்த செடியிலிருந்து

மண்ணிலிட்டவை எல்லாம் முளைக்குமா ?
அனேகமாக எல்லாம்தான்
மரம், செடி, கொடி என
நிஜம் தானா ?
அன்று புதைத்த என் தாத்தா மட்டும்
ஏன் இன்னமும் முளைக்கவே இல்லை ?

Krishangini

The unsprouted treasure

Come on, quick!
Brush your teeth...

Appa, wherefrom do we get water?
From the earth, of course.

The water we pour down?
Back to the earth.

Tell me, food from where?
That too, from the earth.

Shirt, trousers?
From the cotton plant.

How does this plant sprout?
From the seed we sow.

How does the seed get sowed?
From the plant that sprouts.

Do all things sown in the soil sprout?
Mostly they do.
Like the tree the plant, the creeper
Is it not true?
Thatha, my grandpa
Sown the other day -
Why hasn't he sprouted yet?

குட்டி ரேவதி

ஒற்றைக்குரல்

தூரத்தேயிருக்கும் தன்கூட்டுக்குத் திரும்பும்
ஒற்றைப்பறவையின் குரல்
மாலை ஒளியாய்த் தேய்கிறது

காலமணிகளை எண்ணியவாறே
உறைந்து தவமியற்றுகிறது
உயரமலை

ஒளியை ஒதுக்கும் ஆந்தையாய்
உற்சாகத்தை
உதாசீனம் செய்யும் மனிதர்கள்
ஆனாலும் சிலந்திநீராய் என் சொல்
வலைகள் நெய்யும் புராணம் செய்யும்
சிக்கிய இதயங்களைக்
கமலையில் சுமந்து
ஆழ்கிணறு அனுப்பும்

விடிவதற்காய் ஒளிநூற்கும் என்குரல்
விடிவுச்சேலையை வெளியெங்கும்
வீசி மகிழும்

பேசிப்பேசி தேக்கிவைத்த நாதத்திலிருந்து
மீண்டும் உயிர்த்தெழும் குரல்
எவருக்கும் புரியாத அவஸ்தையில்
சப்தங்களைச் சுவைக்கும்
ஊமையாக விரும்பும் உதடுகள்

Kutty Revathi

A Lone Voice

The voice
Of a solitary bird
Returning to its distant nest
Fades as turilight

The lofty mountain
Counting time's beads
In frozen penance.

Like light-allergic owls
Men who disdain pleasure.
But like spider's saliva
My word
Would weave nets
Would spin puranas
Would carry
The captured hearts
To the well's depths.

My voice
Spins light
To bring forth dawn
Spreads the saree of dawn
Into space
And rejoices.

A voice
That springs to life
From the melody
Buried under the debris
Of incessant jabber.

Weighed down
By the agony
Of no one understanding
Lips want to turn dumb
Merely savouring the sounds.

லீனா மணிமேகலை

என்னுள் நான்

என்னுள் நான்
எரிந்து போகின்றேன்
அந்தச் சாம்பல்தான்
வேட்கைகளின் மிச்சங்கள்

என்னுள் நான்
தொலைந்து போகின்றேன்
அந்தச் சுவடுகளின் அச்சுகளே
கனவுகளின் அடையாளங்கள்

என்னுள் நான்
கரைந்து விடுகின்றேன்
மிஞ்சிய கழிவின் துகள்களே
தேடல்களின் தோல்விகள்

என்னுள் எத்தனையோ
இயக்கங்கள்
அத்தனையும் தொடர்கதையாய்

யார் சொன்னது
பிறப்பும் இறப்பும் ஒரு தடவையென்று

Leena Manimegalai

I within Myself

Deep within myself
I burn
The spewn ashes -
Residues of my passions

Within myself
I get lost
The anonymous footprints -
Marks of my dreams

Within myself
I get dissolved
The specks of residual waste -
Busted fragments of my chase

Within myself
Countless churns
All an endless continuum

Whoever said
Birth death
Occurs but once

மாலதி

யௌவனம்

யாராவது ஒருவர் மீட்டுத் தாருங்கள்
மீட்டுத் தாருங்கள் என் வெள்ளைத் தாள்களை
வீணே நான் பறக்கவிட்ட என்
வெற்றுத் தாள்களை.

மையிருந்தால் கோலின்றி கோலிருந்தால்
வெளிச்சமின்றி
இறைத்துப் பறக்கவிட்ட
என் வெள்ளைத் தாள்களை
சில மண்ணில் சில புழுதியில்
சில தண்ணீரில்
என்று வெறிதாய் இறைக்கப்பட்ட
என் வெள்ளைத் தாள்களை.
இன்று என்னிடம் கோலுண்டு
மையுண்டு ஒளியுண்டு
படைத்துவிட இதயமுண்டு
எனக்கு என் தாள்கள் வேண்டும்.

யாராவது எனக்கு
மீட்டுத் தாருங்கள்
என் வெள்ளைத் தாள்களை.
எழுதாமல் விடப்பட்ட என்
வெள்ளைத் தாள்களை.

Malati

Youth

Retrieve for me, any one at all
Retrieve my white sheets of paper
The ones I had flung away -
The blank sheets.

If there was ink, no pen
If pen, no light
And the white sheets
I had cast away in disdain.

Some on earth some in dust
Some in water
My white sheets
I had strewn with scorn.

Today
I have pen
Pen and light too
A heart to create
My sheets I want.

Retrieve for me
Anyone at all
My white sheets
The white sheets
Bearing no writing.

மாலதி மைத்ரி

ஊஞ்சல்

கயிறுகளின் முனை
எங்கிருந்து இறங்குகின்றன எனத் தெரியவில்லை
நீல ஆழத்துக்குள் பார்வை
அடைய முடியாத தூரம்
பலகையில் அமர்ந்து ஆடுகிறேன்
முன்னும் பின்னும் மேலும் கீழும்
ஊஞ்சலின் வேகம் ஓய்ந்தபோது
என் தலைமேல் கொஞ்சம் மேகம்
தொத்திக் கொண்டிருப்பது தெரிந்தது
மீண்டும் உந்திய வேகத்தில்
மேற்கில் இறங்கிக் கொண்டிருக்கும்
பரிதியைக் கால்விரல் முனைகள்
தொட்டு மீண்டன
கொஞ்சம்போல இருட்டத் தொடங்க
கயிறுகளின் வழியே இறங்கிய நிலா
என் உடம்பெல்லாம் வழிந்தது
குளிரில் வெடவெடக்கும் உடலில்
முத்து முத்தாக நட்சத்திரங்கள் பூத்துக்குலுங்க
ஊஞ்சலின் வேகம்
முன்னும் பின்னும் மேலும் கீழும்
வெளியெல்லாம் எனது விசை.

Malati Maitri

The Swing

I know not
Whence the rope ends come down
Into the blue depths
Eyes cannot reach

I sit on the plank
And swing
Forward and backward
Up and down

When the swing slows down
A wisp of cloud
Perches on my head

I push hard again
My toe-tips
Kiss the sun
Sinking in the horizon
And retreat

Night is slowly closing in
The moon seeps
Through the ropes
And bathes my body

On the body quivering in cold
Blossom stars
As so many glistening pearls

The swing in a heady whirl
Forward and backward
Up and down
The cosmos brimming
With my energy.

இரா. மீனாட்சி

கோட்டையும் கோவிலும்

அரசன் கட்டிய கோட்டை, இன்று
மண்மேல் கனவின் கருநிழலே.
காதற் பரிசு அரண்மனை எல்லாம்
கலைந்த சித்திரக் கூடுகள்.

சிதைந்த கல்லில்
சாய்ந்த புல்லில்
மூடிய முள்ளில்
தீய்ந்த மூங்கிலின்
சாம்பல் வெளுப்பில்
அழகின் அவலம்
நர்த்தன சாலையில் பாம்புச் சட்டை
சலங்கை ஒலியா ஊதற்காற்று ?

மொட்டை கோபுர
பாதை ஓரம்
பாறைப் படியின்
ஊற்றுக் காலில்
நாகலிங்க இதழ்க்குளுமை

காலச் சேட்டை கடந்த சிவமோ
தானாய்த் தனக்குக் கோவில் கொண்டது.

Ira. Meenakshi

The Fort and The Temple

The fort erected by king
Today
On a mound of dust
A mere dark shadow
Of a distant dream.
The palace
A love's gift
Today
Mere skeletal remains
Of a smudged picture.

On the ruined stones
    Drooping grass
    Covered thorns
    Burnt bamboos
    Ashen white
Beauty's desolation
Discarded snake sloughs
Littered in the dance chamber
Is the howling wind
The jingle of dancer's foot bells?

Beside the dirt path
Skirting the damaged temple tower
In the seeping spring
Amidst the granite step
The soothing cool
Of the Naagalinga flower.
Has Shiva the divinity
Defying the ravages of time
Found its own temple?

பெருந்தேவி

சொல் மனம் விரிந்த வதனம்
அல்லது வதனத்தின் நகை
அல்லது நகைக்குப் படிமான வெண்முத்து
அல்லது வெண்பாலற்ற சரம்
அல்லது சரசரத்துத் தாக்கிட்ட அம்பு
அல்லது அம்புகள் துறந்த லட்சியம்

அர்த்தம் சொல்லின் குருதித்தீட்டு
அல்லது பொருளாகும் உயிர்ச்சாகரம்
அல்லது சாகரம் உண்ட புள்
அல்லது புட்கள் மலிந்திட்ட ஒரு ஸ்வர்க்கம்
அல்லது ஸ்வர்க்கம் போலொத்த நினைப்பு
அல்லது நினைப்புகள் நெளியும் பிண்டத்தின் நீலம்.

Perundevi

A face adorned by the mind's word
Or the smile dancing on the face
Or the pearl embedded in the smile
Or the string shedding white milk
Or the arrow surging forward
Or the target renounced by the arrow

The meaning the menstrual deposit of the word
Or the ocean of life condensed into the meaning
Or the bird drunk with the ocean's essence
Or the heaven teeming with the birds
Or the memory tinged with the heaven
Or the lumpy blue swarming with the memories.

பூரணி

சாட்சி பூதம்

முதுமை
என்னை நூதன வஸ்துவாக்கிவிட்டது
மனித இனத்திலிருந்து பிரித்து
உலகில் நான்
சாட்சி பூதமாய்
சாப்பாடு; தூக்கம்;
சங்கடம்; உடல்வாதை என.

கடமைகள்; காரியங்கள்;
கொடுக்கல், வாங்கல்கள்;
கஷ்டம், சுகம்;
கோபம், சமாதானம்;
ஏக்கம், எதிர்பார்ப்பு;
எல்லாமே
முடிவுக்கு வந்தாயிற்று.

ஆனாலும் இன்னும்
நான் சாட்சி பூதமாய்
நூதன வஸ்துவாய்.

Poorani

A Phantom Witness

Old age
Has made me a strange object.
Separated from the human kind
I linger in this world
As a phantom witness -
A sheer bundle
Of eating, sleeping,
Embarrassment, physical distress.

Duties, endeavour;
Transactions;
Sorrows, joys;
Anger, truce;
Yearning, expectation -
Everything at a dead end.

But
Still linger do I
As a phantom witness
As a strange object.

ரெங்கநாயகி

புனர் ஜென்மம்

முட்புதருக்கிடையில் தான் நடந்து கொண்டிருந்தேன்
நானும்
வழிதவறி.
எங்கிருந்தோ ஒரு சிசுவின் அழுகை.
குரல் தேடிப் போக
பச்சை மண் மேனியில் இரத்தக் கீறல்கள்.
பசியை
வயிற்று வலி என்றெண்ணி மேலும்
அழுது கொண்டிருந்தது போலும்.
பெற்ற மடியை காணவில்லை.
வெட்ட வெளி இருளில் எங்கே தேடுவது ?
சுற்றிலும் வெறும் மலட்டுக் காடு.
குனிந்து குழந்தை எடுக்க
உடல் வெப்பம்
உயிர் கொடுத்தது
போலும்
வசீகர வார்த்தை வாசனைகள் அந்த நீர்க்
கண்களில்
இடுப்பில் சிறு கை அழுந்தியது போலிருக்க
பசியடங்கியோ
பத்திரம் வேண்டியோ
மடி உறங்கியது.
என்னுள்ளும் ஈரம்.
தாயாக்கிய தலைவனை
தேடிக் கொண்டிருக்கிறேன்.

Renganayaki

Rebirth

Walking along thorny shrubs
I had also lost my way.
An infant's cry from somewhere.
Went in search
Gory blood marks
On the teeny tender body.
Maybe
Mistaking hunger for colic
The little allure weeps
Mother's lap nowhere.
Enveloping dark
Search but daunting.
A shroud of arid woods too.
Leaned and collected.
My body's warmth
Lent a shot of life?
Aroma of bewitching words
In those cute tear-filled eyes.
A trace of the little hand
Pressing my hip.
Hunger satisfied
Or seeking a haven
Sleeps on my lap.
Moistness inside me.
Still looking for the Lord
Who bestowed this motherhood.

ரேவதி

நீ... நான்... மழை...

இந்நகரத்து மழையும்
என் உடலில் வெந்து தணியும்
தீயும் ஒன்றுதான்
சிணுங்கி, பின் சிணுங்கல்களாகி
சலசலப்புடன் ஓய்ந்து விடுவதற்குள்
எனை நனைத்து
என் உயிரை உறைய வைத்து விடும்.

இப்பொழுதும்
எனக்கு உள்ளும் புறமுமாய்
கொட்டுகிறது மழை

ஓடும் பஸ்ஸிலும்
அவளுடைய மார்பைத்
திருட்டுத் தனமாய் வருட விழைகிற
அவனது விரல்களும்
குளிருக்குப் போர்வையாய்
அவனை ஆக்கிக் கொள்ளத் துடிக்கும்
அவளது அவஸ்தையுமாய்
யார் யாருக்கோ பயந்து
பஸ்ஸிற்குள் இழுபடும் அவர்கள்

கண்ணாடியால் தெறித்து
என் உதட்டில் வழிந்த
ஒரு துளி மழை
எனை என்னமாய் சிலிர்ப்பிக்கிறது
என் உட லை
எனை மீறி குளிர்வித்து
மோகத்துள் ஆழ்த்துகிறது

Revathi

You... Me...Rain....

This city's rain
And the fire
Burning and abating within me
Are but the same.
Whining, then a few drones
And rustling to a stop...
In between it drenches me
And freezes my life.

Even now
Pouring rain
Inside and outside.

Running bus
His fingers yearning
For a steathy stroking
Of her breasts...
With a nip in the air
Her ardour
To be enveloped in his body
As a warm blanket...
The tense twosome in the bus
In awe of anonymous eyes.

Scattered on the glass
Lands on my parted lips
A drop of rain
And what ecstasy...
Soothes my body
Immerses me in passion.

In the lovely rainy night
Just past

கடந்து போன அழகான மழை இரவில்
எனை இறுகி அணைத்து
"ஏண்டி பயப்படுகிறாய்" என்று
காதோரம் உரசி
என் கூந்தலை நுகர்ந்து
– ? போன அவன்.

மனம் நோவு கண்டு அழுகிறது
அறுத்தெறிந்து ஓரமாய்
ஒதுக்கவும் முடியாமல்
நினைவுகளோடும் நில்லாமல்
கனவுகளிலும் அவன் எனை வருட
தோற்றுத்தான் போனேன் நான்
உயிர்ப்பெடுக்க முடியாமல்
இயலாமையில் கண்கள் கலங்க
பற்கள் உதடுகள் கடித்து
கண்ணீரை அடக்கிக் கொண்டது.
வாழ்தலின் உயிர் மூச்சுக்காய் ஏங்கி
கால்கள் தன் வழி தொடர்கிறது.
அவன் இப்பொழுதும்
ஆராய்ந்து கொண்டிருக்கக்கூடும்
இந்தச் சமூகத்தின்
ஒழுக்கக் கட்டமைப்பு பற்றி.

Embraced me tight
'Why are you afraid, dear?'
Grazed my earlobe
Nuzzled my tresses
...? And away he went.

Mind weeps in agony.
Unable to sever
And cast aside to a corner
Lingering in my thoughts
Haunting my dreams
His tender stroking...
I stay vanquished.
Eyes clouding helplessly
Teeth bite lips
Tears held in check.

Longing for the breath
Of pulsating life
Legs wend their way
Maybe
He's still analysing
The ethical norms
Of this society.

ரிஷி

வயது

குழந்தையோடு குழந்தையாய்க் குழலூதினேன்.
'கோலி' விளையாடினேன்.
மழலையில் குழறி அழுதேன்.
சொரசொரத்த தரையில் முழங்காலுராய
முட்டுக்குத்தினேன்.
கட்டிலுக்கடியில் குஸ்தி யிட்டேன்.
'மாடோட்டினேன்; மணல் வீடாக்கினேன்...'
குழந்தை வளர்ந்து விடத் திரும்பவும்
கிழவனாகினேன்.

Rishi

Age

With the child -
Blew the whistle - as a child.
Played marbles.
Cried in muddled lisp.
Crawled on all fours
On coarse unfriendly floor.
Wrestled under the cot.
Herded cattle; built sandcastles...

The Child grew up.
And old age reclaimed me.

சல்மா

தன் வழி தவறி
அறைக்குள் சிக்கிய
பட்டாம்பூச்சி துவக்கிற்று
தன் தேடலை

மோதி அதிரும் சுவர்களில்
பரவும் அதன் வர்ணங்கள்
திறக்காத கதவுகளில்
வழியேதுமிருப்பதில்லை

கதவுகளின் வைராக்கியத்தில்
சிதையும் அதன் நம்பிக்கைகள்
உதிர்ந்துவிட்ட வர்ணங்கள்
நீண்டதொரு தேம்புதலை
உருவாக்கும் அதனிடத்தில்

அலையலையாய்ப் படரும்
தனிமையினுள் தன் வழி
பற்றிய அறிதல்களினூடே
அமிழ்ந்துபோகும்

என்றேனும்
கதவு திறந்து வழி கிடைக்குமெனில்
அது பறந்துதான் போகும்
வர்ணங்கள் இல்லையென்றாலும்கூட

Salma

Losing its way
Trapped in the room
Starts its search -
This butterfly.

Its colours spread
On the walls it bangs against
No way out
In the locked doors.

Against the resoluteness of the doors
Shatter its hopes
The hues it has shed
Leave a wistful trail
Of a lingering sigh.

In the enveloping waves of loneliness
It sinks ever so inexorably
Through an awareness of its path.

One day some day
Should door open and way found
Sure it would wing its way out
Though robbed of its hues.

சங்கரி

உயிர்வெளி

நிசப்தம்
பனிபடரும்
மலர்களின் நறுமணம்
மிதக்கும்
நள்ளிரவு
வானத்தைப் பார்த்தபடி..
புல்தரையில் படுத்துள்ளேன்.

தூரத்தே
மத்தளமும்
யாரோ ஒருவர் பாடுதலும்
இடையிடையே
துப்பாக்கி வெடியொலியும்
ஏந்தி வரும் காற்று

பாட்டின் தாளத்தில்
விண்மீன் அசையும்
மேகங்கள் நெட்டுயிர்க்கும்
ககனமெல்லாம்
இசை நிறையும்

தென்றல் தடவும்
எனது தலைமயிரில்
காதின் மடலில்
காலின் பெருவிரலில்

Sankari

Life's Expanse

Midnight -
Floating
In the aroma of dew-laden flowers
And in the enveloping silence.

Gazing at the sky
I'm lying on the lawn.

The breeze -
Carrying
A distant drumbeat
Someone's melody
And intermittent gunbursts.

To the beat of the song
The stars sway
The clouds sigh
The universe brims with music.

The breeze strokes
My tresses
My earlobes
My big toes
My swelling breasts -
Bliss bubbles
My life my body
Savour the night's nectar

And I -
Circling the sky's expanse
Kissing the stars
Singing to the moon

மார்பகத்தின் மேட்டில்
இன்பம் கொப்பளிக்கும்

எனதுயிரும்
எனதுடலும்
இவ்விரவின் தேன் பருகும்

நான்
விண்ணை வலம் வந்து
விண்மீனை முத்தமிட்டு
சந்திரனைப் பாடி
மரத்தில் இளைப்பாறி
மலர்களினைத் தழுவி

எல்லையில்லா அண்டைப் பெருவெளியில்
என்னை இழந்து
என் நாமம் கெட்டு
சதுராடிச்
சுழல்வேன்
துயர் மறுப்பேன்.

Resting on the trees
Fondling the flowers.

In the limitless stretch of space
Losing my name
I spin and frolick
And reject my sorrows.

செல்வி

மீளாத பொழுதுகள்

அமைதியான காலைப் பொழுது
காலைச் செம்மை கண்களைக் கவரும்
காகம் கரைதலும் இனிமையாய் ஒலிக்கும்
நீண்டு பரந்த தோட்ட வெளிகளில்
தென்றல் தவழ்ந்து மேனியைத் தழுவும்
எங்கும் அமைதி எதிலும் இனிமை

நேற்றுவரையும்
அமைதியான காலைப் பொழுது
பொழுது புலராக் கருமை வேளையில்
தடதடத்துறுமின வண்டிகள்
அவலக் குரல்கள் ஐயோ அம்மா
தோட்ட வெளிகள் அதிர்ந்து நடுங்கின
அங்குமிங்கும் காக்கி உடைகளாய்...
அள்ளி ஏற்றிய இளைஞர்கள்
மூச்சுத் திணறினர்

தாய்மையும் அழுகையும்
தங்கையின் விம்மலும்
பொழுது புலர்தலின்
அவலமாய்க் கேட்டன.

காகம் கரைவதும் நெருடலாய் ஒலித்தது
மெல்லிய ஒலிகளும் பயத்தையே தூண்டின
எங்கும் அச்சம் எதிலும் அமைதி.
தென்றல் சிலிர்ப்பில் உணர்வே இல்லை
காலைச் செம்மையை ரசிப்பதை மறந்தோம்.
நேற்று வரையிலும்
அமைதியான காலைப்பொழுது.

Selvi

Lost Times

Morning bathed in peace
Russet morn bewitching the eyes
Even the crow's cawing melodious
In the expanse of garden land
Breeze comes crawling stroking the body
Peace everywhere joy at every turn.

Till yesterday
Morning bathed in peace.
In the pre-dawn darkness
Vehicles trundled roared
Pathetic voices 'Ayyo' 'Amma'
Tremor in the expanse of garden land
Khaki uniforms crowding the landscape...
Youth shoved into vans
Stifled and sighed.

The cries of mothers
The sobs of sisters
Sullied the break of dawn.

The cawing of crows grated
Even soft sounds stirred fright
Fear everywhere sepulchral calm
Rustle of breeze bereft of feeling
Forgot the lure of the russet morn

Till yesterday
Morning bathed in peace

சுபத்ரா

ஒரு நிமிடம்
ஓங்கிய கை

என் கன்னத்தில் பதியுமுன் ஒரு நிமிடம்!

வேலைக்குப் போகுமிடத்தில்
எட்டு மணி நேரத்துக்கும் மேலாகவே
வேலை வாங்கி உன்னை உறிஞ்சும்
முதலாளிக்கு முன் நீ கை ஓங்கவில்லையே!

எட்டு தேர்தல் திருவிழா நடத்தி
எத்தனையோ கோடி வாக்குறுதி தந்து
அத்தனையும் காற்றாய்ப் பறக்க விட்ட
பெருந்தலைக்கு எதிராய் நீ கை ஓங்கவில்லையே!

நாகரிகம் பெற்ற நம்மையெல்லாம்
காட்டுமிராண்டிகளாக்கி காதுகுத்தும்
சினிமா வியாபாரி முன் நீ கை ஓங்கவில்லையே!
ஒரு குவளை காப்பி ஆறிப்போனதற்கா கை
ஓங்குகிறாய்

அடுத்த வேளை சோற்றிற்குப் பயந்து
காக்கிச் சட்டையின் பிரம்புக்குப் பயந்து
ரசிகப் பலியாடுகளின் கல்லடிக்குப் பயந்து
உன் மானுடம் குறைப்பட்டுப் போக அனுமதித்த நீ
காப்பிக்காக என் மானுடத்தைக் கறைப்படுத்த
போகிறாயா?

Subadhra

Just a minute
Before your raised hand
Is planted on my cheek...
Spare me a minute!

In the workplace
He exploits you extracting work
Far beyond the eight-hour schedule
Your boss
Why your hand doesn't rise
In front of him?

Eight election jamborees
Assurances by the millions
All flouted with abandon -
The Eminent Leader.
Why no rise of hand against him?

We the inheritors of a civlization
Are turned into brutes
And fooled by captains of cinema.
Your hand doesn't rise against them!

And
You now raise your hand
All because
A cup of coffee has turned lukewarm.

Concerned about the next meal
Scared of the cane the khaki shirt wields
Panicky about stone pelting

ஓங்கிய கை
என் கன்னத்தில் பதியுமுன்னர்
ஒரு நிமிடம் –

By the brainwashed fan mobs
You've permitted your humanity to be sullied.
And you
Trifling with my humanity for lukewarm coffee?

Before your raised hand
Is planted on my cheek -
Spare me a minute...

சுகந்தி சுப்ரமணியன்

என் குழந்தையின்
தொப்புள் கொடியை
அறுத்தது யார் ?
பாட்டியா ? நர்ஸா ?
நினைவில்லை.

என் முதல் கர்ப்பம்
பற்றிய முதல் செய்தியை
யாரிடம் சொன்னேன் ?
ஞாபகமில்லை.

பள்ளியில் அ, ஆ, இ, ஈ
கற்றுக் கொடுத்த ஆசிரியர் யார் ?
மறந்து போனது.

பள்ளி மைதானத்தில்
விளையாடும்போது ருதுவான கணத்தில்
என் கைபிடித்து சந்தோஷம் கொண்ட
முகம் எது ?
நினைவில்லை.

சட்டென செத்துப்போன அப்பா
எனக்காய் விட்டுப்போன வார்த்தைகள்
எவை எவை ?
நினைவில்லை

முதல் பிரசவம் குறித்து
பயமுறுத்திச் சொன்னது யார் ?
மறந்து போனது

Sugandi Subramanian

Who snapped
The umbilical chord
Of my child?
Paati? Nurse?
Can't remember.

With whom did I share
The first news
Of my first pregnancy?
Escapes my memory.

Which teacher at school
Taught me alphabets
A, Aa, E, Ee?
Forgotten.

Playing at the school-ground
At the onset of puberty
Who held my hand and rejoiced?
Don't remember the face.

What words did Appa bequeath
When he died all of a sudden?
Can't remember.

Who sounded alarm
About the first pregnancy?
Remember not.

In the new town
Of unknown language
Who was the first woman

பாஷை புரியாத ஊரில்
புதுபாஷையில்
முதலில் கேட்ட பெண் ?
நீள்கிறது நினைவலைகள்
ஏதோ ஒரு வகையில்
எல்லாவற்றிற்கும்
முக்கியத்துவம் இருந்தும்

Who spoke to me in the new tongue?

Memory waves keep lapping facelessly
Though in one way or another
Each has its presence.

சுகிர்தராணி

சாயங்களில்
காண இயலாத நிறத்தோடு
பூத்துக் குலுங்கிய
ஒரு செடியிடம் கேட்டேன்.
உன் பூக்களுள்
ஒன்றாய் மாற அனுமதி வேண்டும்,

என்னைப் போன்றதொரு செடியில்
நீ பூவாவதை விட
உன்னில் பூப்பது சுகமென்றது.

சரிதான்
மழைத்துளியிலிருந்து
என்னை மீட்டெடுத்து
மேகமாய் மாறிவிட்டேன்.

Sukirtarani

A plant
Laden with blooms
Of hues
Not captured in paints.

I appealed to the plant
Pray permit me
To turn into a flower in your stalk.

Why become a flower
In a plant like me?
Blossom within yourself
That'll be fulfilling
Declared the plant.

Sure enough
Reclaimed myself
From the raindrop
And turned into cloud.

சுமதி ரூபன்

கழுகு

அவள் கால்ச்சக்கரங்கள்
ஓய்வின்றி சுழல்கிறது
சூரியப் புலவின் முன் இங்கேயும்
பெண்ணின் பெருமைக்காய் எழுதல்
நிகழத்தான் செய்கிறது
குளிரோ வெய்யிலோ
காலத்தோடு புணர்தல்
கடமைக்காய் பம்பரமாதல்
புலம் பெயர்ந்தபோதும் மாறுபடாத ஒன்று.

உழைப்பு பெருக்கப்பட்டு
உடல் வகுக்கப்பட்டாலும்
பத்தினி பட்டத்திற்காய் புன்னகைத்து
பாடாய்ப் படுவது
முதுகில் ஏற்றப்பட்ட புதிய பளு.

அவன் புருஷ லட்சணத்திற்காய்
எட்டு மணிநேர உழைப்பு போக

சோபாவில் கால்நீட்டி வாய்பிளந்து தூங்குதல்
காப்புக் கை சாப்பாடு சுவையென்று
புருவம் தூக்கி சப்புக்கொட்டி உண்ணுதல்
காலித்தட்டை கழுவிப்போட்டு
தொலைக்காட்சி செய்தி பார்த்தல்

முடிவில்
கழுகுபோல
கட்டிலில் காத்திருப்பான்
அவள் வரவுக்காய்

Sumati Roopan

The Vulture

Wheels under her feet
In relentless whirl
Here too continues
Rising before break of dawn
To uphold the glory of womanhood
Chill or heat
Copulating on schedule
Crushing load of work -
Nothing changes
Even in diaspora.

Toil multiplies
Body wilts
But...
To don the mantle of the devoted wife
Embracing endless grind
A cross loaded on the back.

And he...
As the lone insignia of manhood
An eighth-our work schedule
Stretching himself on the sofa
Enjoying a snooze with mouth open
'Ah! Nothing like home food!'
Raising the eyebrows
Savouring the food making a click
Wash the empty plate
And watch TV news.

Eventually
Like a vulture
Would wait in the bed
For her arrival.

தமிழச்சி தங்கபாண்டியன்

மஞ்சணத்தி மரம்

முறுக்கேறிய உன் மரக்கிளையில்
சிராய்த்துக் கழிந்தது
என் சிறு பிராயம்.
மூச்சிறைக்க ஒடி வந்து என்
முதல் ருதுவை
உன் இலையொன்றைக்
கிள்ளியபடியே பகிர்ந்தபோது
தொடங்கிற்று என் பதின் பருவம்.
கிடை ஆட்டு மந்தை ஒன்று
காலத்தை மென்றபடி உன்
காலடியில் இளைப்பாற,
அதன் குறுந்தாடி பார்த்துப்
பால் பிரித்த பேதமையில்
போனது அப் புதிர்ப் பருவம்.

உன் செதில் புடவையெங்கும்
சிறு முடிச்சுக்களாய் என் நினைவை
முடிந்து வைத்திருக்கும்
உன் பெரு உடல் நீவிப்
பிசின் எடுத்துக் கோந்து ஒட்டிக்
கழிந்தது என் வளர் பருவம்.
தாயிடமும் பகிராத
என் மொட்டவிழ்ப்பை,
தாழ் சடையின் கர்வத்தை,
உன் தண் நிழலில் தலை சாய்த்த
தனிமையுடன் நகர்ந்தது
என் இளம் பருவம்.
இன்னமும் புரிபடா

Thamizhachi

The Manjanathi tree

Getting abraded
In your gnarled branches
Was spent my childhood.

Running breathless
Plucking a leaf from your branch
And sharing my first period
Commenced my teens.
A herd of sheep
Munching the Time
And relaxing at your feet,
Beholding their goatee,
Vaguely grappling
With the gender-divide,
Was spent that phase of mystery.

In your saree of scales
Are secured my memories
As tiny knots;
Stroking your massive body
Extracting gum and pasting
Were spent my growing years.
My blossoming I shared not
Even with my mother,
The pride of my lusty locks,
Reclining in your cool shade
Meandered in solitude
My youth.

இப் பேரிளம்பெண் பருவத்தின்
பிசாசுக் கனவுகளையும்,
புதிதாய்ப் படர்ந்த தேமலையும்,
தொலைத்த நண்பர்களையும்,
நான் சொல்லி அழுவது
நுனி அசையா இலைகளுடன்
நுணா மரமே, நீ
மந்தமாய் இருக்கும்
நடு மதியத்து வெயிற் போதில்தான்.

என் துரோகத்தின் வலி சுமக்கும்
உன் முனை உடைந்த முட்கள்.
என் ரகசியங்களின் போதை தரும்
கள் ததும்பும் உன் பூக்கள்.
என் ஆசைகளின் ருசி அறியும்
தேன் உதிர்க்கும் உன் பழங்கள்.

என் ஆதித் தாயே, மஞ்சணத்தி,
முகவாயில் நரை முளைத்து
பெருங்கிழவி ஆன பின்னும்
உன் அடிமடி தேடி நான் வருவேன்.
அப்போது,
என்
தோல் நொய்ந்த பழம் பருவத்தை
உன்
தொல் மரத்துச் சருகொன்றில்
பத்திரமாய்ப் பொதிந்து வை.
உள்ளிருக்கும் உயிர்ப் பூவை
என்றாவது
நின்று எடுத்துப் போவாள்
நிறைசூல் கொண்ட இடைச்சி ஒருத்தி!

Even now
In my mature youth
Difficult to discern,
Share and lament do I
My dreadful dreams.
New spreading pallor,
Lost friendships...
O Manjanathi tree!
At the mid-noon hour
In your languor
With leaf-tips frozen still.

The pain of my betrayal
Borne by your blunted thorns.
Your flowers laden with toddy
My secrets heady.
Your fruits dripping with honey
Know the savour of my longings.

My primeval mother, Manjanathi!
Even after I turn a granny
Stray grey sprouting on my chin
Would I seek you out
To snuggle in your lap.
Then
Secure my shrivelled old age
In a parched leaf.
Some day
Would tarry and take away
The life-flower inside -
A very pregnant shepherdess.

Footnote
In Tamil Sangam literature,
Pallor (Pasalai and Themal)
symbolises suppressed libido.

தேன்மொழி

சிறகுகள்

யார் செதுக்கிய
தேவதைச் சிலையோ
அந்தச் சாலையோரம்

விரல்கள் சிந்துகிற
கவிதையை குடித்தபடி
இடையினை கொஞ்சுகிறது
ஒரு புறா

தலைமுடியை
கால் நகங்களால் இசைத்தபடி
விழியினைப் பாடுகிறது
ஒரு புறா

கழுத்திலிருந்து
அலையெனப் புரண்டு கிடக்கும்
ஆடையோடு சேர்த்து
இறகுகளால் தழுவுகிறது
மற்றுமொரு புறா

என்
மனசு உதிர்த்த சிறகோ

தேவதையின்
உயிரில் நனைந்து
உச்சியிலிருந்து
பாதம் நோக்கி வழிகிறது
ஒரு சொட்டுத் துளியாய்.

Thenmozhi

The Wings

One knows not
Who sculpted it
The sculpture of an angel
By the roadside.

Drinking in the poetry
Flowing from its fingers
Fondles the angel's waist -
One pigeon.

Stroking the tresses
With its claws
Sings the angel's eyes -
Another pigeon.

Embraces with its wings
The angel
In its wavy robes
Flowing from its neck -
A third pigeon.

But
The feather
Shed by my heart.

Bathed in the angel's
Lifeblood
Drips down in ecstacy
From crest to foot
As a tiny drop.

திலகபாமா

விரல்களால் வாசிக்கப் பட்டவை

நினைவுப் பரணிலிருந்து எழுப்ப முடியவில்லை
தூசிக்குள் சிக்கிக் கொண்டிருக்கும்
வார்த்தைகளை

வந்து விடும் வார்த்தைகள்
வரங்களாகின்றன
தைத்து கிடந்த முட்களை
எடுத்து விட்ட சுகம் தந்ததால்

மூடிய இமைகளுக்குள்
உலவும் இருளுக்கு
வெள்ளைக் காகிதங்களின் குணம்
கவிதைகளாய் என்
நினைவுகளைச் சுமந்து
மடி நிரப்பியிருக்கிறது

விரல்களால் எழுதப் பட்டதாய்
சொல்லப் பட்ட கவிதையோ
உண்மையில் நிரம்பிய மடியிலிருந்து
விரல்களால் வாசிக்கப் பட்டவை.

Thilaka Bhama

Strummed by Fingers

Words
Buried in a pool of dust
I can't retrieve from the memory's loft.

Stray words that emerge
Blossom as boons
Yielding the solace
Of pulling out embedded thorns.

The inky darkness
Encased in shut eyelids
Assumes
White paper's aspect
Fills my *madi*
As poems
Carrying my memories.

Poetry
Said to be written by fingers
Are indeed strummed by fingers
From the brimming *madi.*

Footnote
Madi - The part of a dhoti or saree kept loose, to serve as a kind of pouch for keeping things.

திரிசடை

சிலந்தி

சிலந்தி ஒன்றைக் கண்டேன்
மேலே சுவரிலும் இல்லை
கீழே தரையிலும் இல்லை.
சுவாமி அறையில்
வெள்ளித் தாம்பாளத்தில்
வண்ணம்மிக்க இழைக் கோலமாம்
இருதயக் கமலத்தில் வைத்திருக்கும்
எரியும் வெள்ளிக் குத்துவிளக்கின் அருகில்
கருகருவென்று வெள்ளைக் கோலத்தின் மேலே
எட்டுக்கால்களோடு சுற்றிச்சுற்றி வரும் சிலந்தி...
காலை மாலை விளக்கு ஏற்றும் நேரமெல்லாம் –
அடியில் பிரதட்சிணம் செய்யும் இச்சிலந்தி
உன் மாயையையும் காளஹஸ்திக் கோவிலையும்
நினைத்துக் கொள்வேன்.

இன்று விளக்கு வைக்கும் நேரம்
என் சிலந்தி
அசைவற்றுக் கிடந்ததைக் கண்டேன்.
உன் காலடிகளை நம்பி ஒரு சில நாட்கள்
வாழ்ந்த சிலந்திக்கு
நீ முக்தி யளித்ததாகவும் நினைத்தேன்.
ஆனால் எனது உள்ளம்
அதன் ஓடி ஆடிய கால்களைத் திரும்பத்
திரும்ப நினைப்பதும் ஏனோ ?

Tirisadai

The Spider

Saw a spider
Not on the wall above
Not on the floor below
In the prayer room
On the large silver salver
Next to the sacred silver lamp
Planted in the colourful kolam
Depicting a lotus-like heart
Right on the white kolam on the salver
Leisurely going round and round
Moving its eight dark legs
This spider...
Morning evening
At the lamp-lighting hours
Performing pratakshanam
Moving around left to right
In worshipful surrender at your feet.
Your mysteries
And the Kalahasti temple
Fill my mind.

Today
Time to light the sacred lamp
I found
My spider lying motionless.
Pinning faith in your holy feet
The spider lived a few days

சிலந்தியின் கதை முடிந்தாலும்
என் மனம் போடும்
சிலந்தி வலைக்குப் பெயர்தான் என்னவென்று
விளக்கம் தருவதும் யாரோ ? என்றோ ?

And you've granted salvation
So ran my thoughts.

But
My mind keeps harking back
Again yet again
On those eight moving legs...
Why I know not.

The spider's story has ended
But
The spider web
My mind keeps weaving -
Who'll name it?
And when?

உமா மகேஸ்வரி

வெறும் பொழுது

வெளி வாசல் வழியே
சலித்த மதியம்.
சாக்கடை நீரருந்தும் குருவி.
உதிர்கிற மென்மையும்
உடைபடாக் கடினமும்
விசித்திரமாய் முடைந்த மௌனம்.

திரும்பவும் நெஞ்சுறுத்தும்
விரும்பாத நினைவின் துரு.
குனிந்து நூல் உருவி
வளைத்துப் பின்னல்களைத்
தொடுக்கிறது ஊசி, சிரத்தை பிசகாமல்.

உண்ணாமலையக்காவின் அங்கலாய்ப்பில்
ஆச்சியின் பெட்பான் அவஸ்தைகள்.
முருகேஸ்வரிக்குப் பிறந்ததும் நெறிபட்ட
மூன்றாவது பெண் குழந்தை.
மீன்காரம்மாவின் மகள்
பதினான்கிலேயே தாலியறுத்த கதை.
அடுத்த தெரு வளைகாப்பு.
அம்மாவின் மூட்டுவலி
என்றிவ்வாறு செய்திகள்

மிதந்து நெளியும் சூழ்ந்து.
பின்னல்கள் தொடரத் தொடர
உருண்டு, சிறுத்துக்
கரைந்து காணாமலாகும்
கம்பளி நூற்கண்டு,
எதையோ உருவகிப்பதாக
எனக்குப் பிரமை காட்டி

Umamaheswari

Barren hours

The noon
Filtered through the front door.
A sparrow drinking gutter water.
A silence
A strange weave of
Softly enveloping tenderness
And unrelenting hardness.

The rust of unsavoury memories
Grating the mind again.
The needle bending down
Releasing the thread
And stringing a weave,
With attention unflagging.

Unnamalai Akka bemoaning
Granny's bedpan hassles.
Murugeswari's third girl child
Strangled at birth.
Fisher aunty's daughter
Widowed at fourteen.
Bangle ceremony next street
Heralding the first delivery.
Amma's arthritis.
News assorted
Floating slithering enveloping.

The bundle of woolen thread
Rolling shrinking disappearing
As knitting drags on -

இவையன்றி –
காரணமற்ற உற்சாகத்தோடு
கருஞ்சாம்பல் அணிலொன்று
களித்துத் திரியும் தனித்து.

Creating an illusion
Of a metaphor.

Besides -
With a joy sans reason
A lone ash - hued squirrel
Gambols gleefully.

உஷா சுப்ரமணியன்

தனிமை

தனிமை அவள் கணவன்
உடலோடு தோன்றிய மருப்போல
களைய முயன்றாலும் தானாகப்
பிரியாதது; தவிர்க்க முடியாதது.
பிறை ஏன் பெண்ணின் முகத்துக்கு மட்டும் உவமை ?
ரத்தம் வற்றி, சோகை முகம் வெம்பிப் போனபின்
வெளுத்துப்போன நகமும், நரம்போடிய விரலும் மட்டுமே
வெண்மைக்கும், குளுமைக்கும் உவமை.
எண்ணித் தரும் காசு
அதில் தினம் கழிவு தன்மானம்
அள்ளி வீசும் ஏளனம்
அதில் நிதம் பீறும் சுயஇரக்கம்.
அழைப்பு விடுக்க வேண்டிய பார்வை
அடங்கி, அடங்கியே சமிக்ஞை மறந்து போச்சு.
அழைக்கும்போது இணங்கி, இணங்கியே
காமமும், காதலும் மரத்துப் போச்சு.
வானத்தை மறைக்கும் வெள்ளைச் சுவர்கூட
பின் இரவுப் பார்வையில் கரிய பூதமாய் ஆச்சு.

Usha Subramanian

Remoteness

Remoteness -
Her husband's preserve
Like a mole born with his body
Resisting any attempt at peeling
Etched and unavoidable.

Crescent likened to a woman's face -
Why?
Drained of blood
Anaemic shrivelled face
Nails a deathly white
Fingers lined with gnarled veins
These not similes
Of whiteness and coldness?

Grudgingly counted the dole each day
The daily drain of self-esteem.
Sarcasm tossed with disdain
Surging self-pity each passing day.
Inviting stifled glances
Amorous signals long forgotten.

Ever yielding to his demands at whim
Ardour and love benumbed
Even the white wall shielding the sky
Looms late nights as black ghost.

வெண்ணிலா

சிவக்கும் மருதாணி விரல்கள்
கிளர்ச்சியூட்டுகின்றன

விரல்களுக்குள் ஏறும்
தாவரமொன்றின் பச்சைவாசம்
என்னைக் காடு நோக்கி ஈர்க்கிறது

விண் தொடும் வேகத்தோடு
உடல் பருத்து நிற்கும்
பிரம்மாண்டத் தாவரமாய்
விரிகிறது என் உடல்

வேர் கடத்தும் நீராய்
உடலெங்கும் ஊறுகிறது
பச்சையம் போன்றந்தச் சிவப்பு

கனி தேடியலைந்த பறவையொன்று
கனிந்த பழமெனக்
கொத்தித் தின்கிறது

பறவையின் எச்சம் பரப்பும்
விதைத் தூவலில்
காடெங்கும் முளைத்தெழுகிறேன் நான்

Vennila

Fingers
Ruddy with henna dye
Exhilarate.

Green aroma of a plant
Seeping through fingers
Drawn am I to the forest.

As a tree titanic
With body immense
Eager to graze the sky
My body expands.

The red
Suffuses the body
As the root sap
As pervasive chlorophyll.

A bird in search
Finds fruit in fingers
Pecks and savours.

In seed scatter
Via bird droppings
Sprout I
Filling the forest.

This anthology in translation captures a cross section of the works of Tamil women poets through the ages—from the Sangam period to the present. This is the first such collection, with a sweep so extensive and a coverage so comprehensive. The sublime poetry of Sangam; the simple and lofty ethical verses and aphorisms of Auvaiyaar; the devotional intensity of Kaaraikkaal Ammaiyaar and Aandaal; the kaleidoscopic variety of 'stray verses'; the raw earthiness of folk songs; and the vibrant and poignant outpourings of today's self-empowering women—all these strands are woven into this fine tapestry.

The translation is marked by fidelity to the source text, sensitivity to the target language, and a style lyrical and lucid.